புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

===================================================================

# கனாத்திறம் உரைத்த காதையில் வெளிப்படும் கண்ணகியின் ஆளுமை

===================================================================

**கட்டுரையாளர்**

***முனைவர் சு.திரிவேணிM.A.,Ph.D.,***

*தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்*

*ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி*

*கோயம்புத்தூர்.*

===================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

*பெருங்காப்பியத்துக்கான இலக்கணங்களைக் கூற முற்படும் நூல்கள் காப்பியத் தலைமை குறித்தும் சில வரையறைகளை முன்வைக்கின்றன. பொதுவாக, ஆளுமை, கதையின் மையமான, நேர்மறைப் பண்புகள் காப்பியத் தலைமைக்கு இன்றியமையாதவை. சிலம்பானது கண்ணகியைத் தலைமையாகக் கொண்ட கதை. இன்னும் குறிப்பாகக் கூறினால், கண்ணகியின் காலில் அணிந்த சிலம்பால் எழுந்த பெயர். வெளியுலகை அறியாத அறியாமை, குடும்பத்தையும் குடும்ப உறவுகளையும் காப்பாற்றிக் கொள்ளும் புத்திசாலித்தனமில்லாமை, கணவனின் தவறுகளைச் சகித்துக் கொண்டேயிருப்பதோடு அவற்றுக்குத் தானும் துணைநிற்கும் அடிமைத்தனம், கணவனின் மரணத்துக்குப் பழிவாங்கும் சுயநல வன்மம், தற்கொலை என நாம் அறிந்தவளும் முற்றாகப் பலவீனங்களாலும் எதிர்மறை மதிப்பீடுகளாலுமே கட்டமைக்கப்பட்ட ஒரு பெண்ணின் கதையிலா இளங்கோவடிகள் ஈடுபாடு கொண்டார்? அவளது காலணியைக் காப்பியப் பெயராகவும் அவளைத் தலைமை மாந்தராகவும் அமைக்குமளவு முக்கியத்துவம் கொடுத்தார்? இவ்வாறான, தோல்விக் குறியீடான கண்ணகியா தெய்வமாகப் போற்றப்பட்டாள்? காப்பியம் படைத்து, கோயிலமைத்து, வட நாட்டரசர்கள் கல்சுமந்து வரக் காலத்தால் அழியாதவளாக உருவாக்கி, பல நாட்டு அரசர்களும் வந்து வழிபடும் அளவு நாம் அறிந்த கண்ணகியிடம் சிறப்பு இருக்கிறதா? எனப் பல வினாக்கள் இயல்பாக எழுகின்றன. கண்ணகியின் ஆளுமையை உணர்வதும், கதை மாந்தராகவும் பெண்ணாகவும் அவள் சிறப்பை வெளிக்கொணர்வதுமே இவ்வினாக்களுக்கான விடையாக அமையும்*

*என்பதால் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் பாத்திரப்படைப்பில் முக்கியத் திருப்புமுனையாக அமைந்த கனாத்திறம் உரைத்த காதையில் கண்ணகியின் ஆளுமை குறித்து இந்த ஆய்வு அமைகிறது.*

**முன்னுரை**

*காப்பிய ஆசிரியர் கண்ணகியை ஆரம்பம் முதற்கொண்டு நேரடியாகக் கண்டு அறிந்தவரில்லை. கண்ணகி குறித்து மலைவாழ் மக்கள் மூலமே இளங்கோ முதன்முதலில் அறிகிறார். அரசபையில் வீற்றிருக்கும் அவருக்கு, மலை மீதிருந்து மரணித்த கண்ணகி குறித்துப் பதற்றத்தோடு கூறும் மலையக மக்களே காட்சிப்படுத்துகிறார்கள். இளங்கோவுக்குக் காட்டப்படும் கண்ணகியின் உருவம் அழகான, ஆபரணங்களோடு பொருந்திய, இன்முகம் கொண்ட, இனிய வாழ்வு வாழ்ந்த பெண்ணல்ல; அதிகார வல்லமை மிக்கவளுமல்லள். மாறாக, மதுரை நகரில் கணவனைப் பறிகொடுத்து விட்டு கோபமும் ஆதங்கமும் ஆற்றாமையும் கூடவே இயலாமையுமாகப் பாண்டியனோடு வாதிட்டு, மதுரை நகர் விட்டு வெளியேறி, சேர நாடு வந்தவள். திருச்செங்கோடு என்பது பெரும்பாலானோர் துணிபு. அதீத கோபம், விரக்தி, ஆற்றாமை, கண்ணீர், சோகம் உள்ளிட்ட உணர்வுக் கலவையால் தாக்கப்பட்டு உடலும் மனமும் சோர்ந்து வருந்த மதுரை நகரிலிருந்து திருச்செங்கோடு வரை ஓய்வில்லாமலோ அல்லது சிறு ஓய்விலோ கால்நடையாகவே வந்தவள். அவளது அப்போதைய மனநிலையில் போக்குவரத்து ஊர்திகள் அல்லது மனிதர்களின் உதவியைப் பெற்றிருக்க வாய்ப்பில்லை.*

*நாட்கணக்கில் பசி, தாகம், இன்ப, துன்பமறியாத வெறுமை மனநிலையில் நடந்தே வந்த பெண்ணின் உருவம் கண்டு மலையக மக்கள் அதிர்ந்து போகிறார்கள். அந்த உருவம் குறித்த வர்ணனையே இளங்கோ முதன்முதலில் அறியும் கண்ணகி! அந்த வடிவமே அவர் மனதில் படிகிறது. பலமான தாக்கத்தை, அதிர்வலைகளை எழுப்புகிறது. சோர்ந்து, களைத்துத் துவண்டிருந்த கண்ணகியை அந்த நிலையிலும் ‘தெய்வப் பெண்’ணாகவே மக்களும் அரசபையில் இருந்த சான்றோர்களும் உணர்கிறார்கள். இதுதான் கண்ணகியின் ஆளுமை! அப்படிப்பட்ட கண்ணகியின் பாத்திரப்படைப்பு முரணாகப் புரிந்து கொள்ளப்படக் காரணம் சிலம்பில் அவள் பேசுமிடங்கள் மிகச்சிலவாகும். பேசாமடந்தை எனப் போற்றப்படும் கண்ணகி, வழக்குரை காதை நீங்கலாகத் தன் உள்ளக்கருத்துகளை மிக அரிதாகவே வெளிப்படுத்துகிறாள். அத்தகைய அரிதான இடங்களுள் கனாத்திறம் உரைத்த காதையும் ஒன்றாகும். சிலம்பில் கனாத்திறம் உரைத்த காதைக்கெனச் சில சிறப்புகள் உள்ளன. கண்ணகி என்பவள் 'பத்தினி' என்ற பெயரில் சுயசிந்தனையோ, உணர்வோ அற்ற அபலையல்ல என்பதற்குச் சான்றாக அமைகிறது கனாத்திறம் உரைத்த காதை.*

**ஆய்வுக் கருதுகோள்**

*சிலம்பில் கண்ணகி தன்மானம், ஆளுமை, அன்பு எனப் பல தகைமைகளைக் கொண்டவள் என்பதையும் அச்சிறப்புகளைக் கனாத்திறம் உரைத்த காதை வாயிலாக அறியலாம் என்பதையும் கருதுகோளாகக் கொண்டு இந்த ஆய்வு அமைகிறது.*

**ஆய்வு நெறிமுறைகள்**

ஒரு குடும்பத் தலைவியாகவும் செல்வாக்குப்பெற்ற குடும்பப் பின்னணியில் வைத்துக் கண்ணகியின் பண்புகளை ஆராயும் இடங்களில் சமூகவியல் அணுகுமுறையும் கண்ணகியை ஒரு தனிப்பட்ட பெண்ணாக, மனைவியாகக் காணும் இடங்களில் உளவியல் அணுகுமுறையும் கையாளப்படுகிறது.

கண்ணகியின் சில சொற்கள் கொண்டு பெரும்பாலும் உளவியல் நோக்கிலேயே ஆய்வு அமைவதால் சிலப்பதிகார அடிகளே பெரிதும் மேற்கோளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கனாத்திறம் உரைத்த காதை**

சிலப்பதிகாரத்தில் கண்ணகியைப் பிரிந்து வாழும் கோவலன் மீண்டும் கண்ணகியிடம் வந்து சேரும் பகுதி இது. பெண்ணின் பெருமை பேசும் சிலம்பில் கனாத்திறம் உரைத்த காதையில் பெண்களும் பெண்கள் சார்ந்த கதைகள் மற்றும் செய்திகளுமே அதிகமாக இடம்பெறுகின்றன.

கண்ணகியின் ஆளுமை, எதிர்காலத்தைக் கணிக்கும் அறிவு, அன்பு என மூன்று முதன்மைக் குணங்களும் ஒருசேர வெளிப்படுவது இப்பகுதியில்தான்.

**மகளிர் மூவர்**

கனாத்திறம் உரைத்த காதையில் இடம்பெறும் மகளிர் மூவர் ஆவர்.

1. மாலதி
2. தேவந்தி
3. கண்ணகி

**மாலதியும் தேவந்தியும்**

மாலதி என்னும் பெண் தனது மாற்றாள் மகனுக்குப் பால் புகட்டியபோது விக்கல் ஏற்பட்டு அப்பாலகன் இறந்துபோனான். தன்னைக் கணவனும் பிறரும் சந்தேகிப்பரே என அச்சம் கொண்ட மாலதி, இறந்த உடலைத் தூக்கிக்கொண்டு தேவ கோட்டங்களில் சென்று முறையிடத் தொடங்கினாள். அமர்தருக் கோட்டம், வெள்யானைக் கோட்டம், புகர் வெள்ளை நாகர் தம் கோட்டம், பகல் வாயில் உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க் கோட்டம், வேற் கோட்டம் வச்சிரக் கோட்டம், புறம்பணையாள் வாழ் கோட்டம், நிக்கந்தக்கோட்டம், நிலாக் கோட்டம் எனப் பத்து கோட்டங்களிலும் சென்று மனம் வருந்த வேண்டியவளுக்குக் கடவுளின் அருள் கிட்டவில்லை.

இறுதியாக பாசண்டச் சாத்தன் கோயிலில் மனமுடைந்து வேண்டிய அவள் முன்,

"செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்
பொய்யுரையே அன்று பொருளுரையே"1

எனக்கூறிப் பாலகனை மீண்டும் உயிர்ப்பித்துத் தருவதாக நம்ப வைத்து அவனது உடலை வாங்கிய இடாகினிப்பேய் அப்பாலகனின் உடலைத் தின்றுவிட்டது. இடிவிழுந்த மயில்போலக் கதறி அழுதிட்ட மாலதியின் முன், சாத்தன் என்னும் தெய்வம் தோன்றி ஆறுதல் உரைத்ததுடன் அப்பாலகனது வடிவம் கொண்டு அவளது வீட்டிற்கு வந்தது.

பாலகனாக இருந்த சாத்தன் வளர்ந்து, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி, தேவந்தி என்னும் பெண்ணை மணந்து எட்டு ஆண்டுகள் இல்வாழ்க்கை நடத்தினான்.

ஒரு மகனாகத் தன் தந்தை - தாய்க்கு உரிய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றிய பின்னர், தேவந்தியிடம் தன் வரலாறு கூறி, 'எம் கோட்டத்து வா' எனக் கூறி மீண்டும் தேவ நிலைக்குச் சென்றான். சாத்தன் கோட்டத்திற்குத் தினமும் சென்று வழிபட்டு வந்த தேவந்தியே கண்ணகியின் உற்ற தோழியாவாள்.

**கண்ணகியின் ஆளுமையும் உள்ளுணர்வும்**

பேசாமடந்தை எனக் குறிப்பிடப்படும் கண்ணகி பேசுமிடங்கள் மிகச் சிலவேயாகும். தன்னைப் பிரிந்து சென்ற கணவனைப் பற்றியும் தன் மன வருத்தம் குறித்தும் கண்ணகி தனது உள்ளுணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது தேவந்தியிடம் மட்டுமே!

கண்ணகியின் உள்ளுணர்வானது அவளுக்குக் கனவாகக் காட்சிப்படுகிறது. தன் கணவனோடு வேறொரு நகரம் செல்வதாகவும் அந்நகரில் தேளின் விடம் போலக் கொடிய பழிக்கு ஆளாகிக் கோவலன் இறக்க, தான் அந்நாட்டின் அரசனோடு வாதிடுவதாகவும் அரசனுக்கும் மக்களுக்கும் தீங்கு நேர்வதாகவும் கனவு காண்கிறாள் கண்ணகி. கண்ணகியின் ஆழ்மனத் தெளிவும் அறிவும் எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றன. அதைக் கேட்ட தேவந்தி,

"சோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கி
காமவேள் கோட்டம் தொழுதார் கணவரோடு
தாம் இன்புறுவர்"2

எனக்கூறிக் கணவனை அடையக் கடவுளை வழிபடுமாறு ஆலோசனை கூறுகிறாள். அதைக் கேட்ட கண்ணகி,

"பீடன்று"

என ஒற்றை வார்த்தையில் மறுத்துத் தன் மானவுணர்வைப் புலப்படுத்துகிறாள். கணவன் - மனைவிக்கிடையிலான அன்பு அன்னியோன்யமானது. கடவுளிடம் கூடக் கையேந்தி யாசகம் பெறத்தக்க உணர்வல்ல. அந்த அன்பு பிறரின் பரிந்துரையால் கிடைப்பது, அது கடவுளாகவே இருந்தாலும் மனைவிக்கு அவமானம் என்று கருதும் உயர்வான கண்ணகியின் ஆளுமை மற்றும் சுய மதிப்பு வெளிப்படும் இடம் இது.

தேவந்தியிடம் கண்ணகி பேசியபின் ஒரு பணிப்பெண் வந்து கோவலன் கண்ணகியைக் காண வந்ததாகக் கூறுகிறாள். தவறான வழியில் சென்று வான்பொருள் குன்றம் இழந்ததாக வருந்திக் கூறும் கோவலனிடம்

"சிலம்புள கொண்ம்" 3

என்று கூறும் கண்ணகி, கோவலன் பொருளை இழந்ததாலேயே வந்துள்ளான் என்றுணர்கிறாள். அவனைத் தன்பால் ஈர்க்கவும் தக்கவைக்கவுமான எந்த முயற்சிகளிலும் அவள் ஈடுபடவில்லை. அவனிடம் கூடத் தன்னோடு வாழும்படிக் கெஞ்சவில்லை அவள்.

கண்ணகிக்கு மாறாக, மாதவி கோவலன் தன்னை விட்டுப் பிரிந்த பிறகு அவன் மனதில் தன் நினைவுகளைத் தூண்டித் தன்பால் ஈர்க்க முயற்சிக்கிறாள். வசந்தமாலையிடம் அவள் தாழம்பூ மடலில் கடிதமொன்றை எழுதி அதைத் தன் கூந்தல் ஒன்றைக் கொண்டு சுற்றிக் கொடுக்கிறாள். கோவலனின் பலவீனமான மனதில் மாதவியின் நினைவுகள் தூண்டப்பட்டாலும் தன் பலவீனத்தை மறைக்க அவன் மேலும் இழிவான சொற்களால் மாதவியைப் பழித்துப் பேசுகிறான். அந்த ஒரு முறைக்குப் பின்னர் மாதவி மீண்டும் கோவலனைத் தன்னிடம் கொணர முயலவேயில்லை. தன் மீதான அன்புக்காகக் கையேந்துவதும் யாசிப்பதும் அவமானம் என்பதில் உறுதியாக இருந்த இவ்விருவரும்தான் மகளிருக்கான இலக்கணம்.

ஆண்மையச் சூழலில் தன்மானம் மிக்க கண்ணகி ஒரு அடிமையைப் போல உருவகிக்கப்பட்டாலும் கண்ணகியின் ஆழ்மன உணர்வுகள், எதிர்காலம் குறித்து அறியும் ஆற்றல், தன்மானம் இவற்றோடு அவளது அளவில்லாத அன்புக்கும் சான்றாக அமைகிறது கனாத்திறம் உரைத்த காதை.

**வருத்தம், அச்சம் கடந்த அன்பு**

கண்ணகியிடம் வந்த கோவலன், தான் பொருளையெல்லாம் இழந்து விட்டதாக வருந்துகிறானேயல்லாமல் தன் முறை தவறிய வாழ்வுக்காக அவளிடம் மன்னிப்புக் கேட்கவில்லை. அதனால் கண்ணகி மனம் கொதித்திருக்க வேண்டும். அவனைத் தன் வீட்டிலேயே இருக்குமாறு அவள் கூறவில்லை. மாறாக 'என் சிலம்புகள் இருக்கின்றன. எடுத்துச் செல்' என்கிறாள். கோவலன், அந்தச் சிலம்புகளையே முதலாகக் கொண்டு வணிகம் செய்து பெரும் பொருள் சம்பாதித்து அவளுக்குத் தருவேன் என்று வார்த்தைகளால் தோரணம் அமைத்து வாக்குக் கொடுக்கிறான். இப்போதும் அவனுக்குச் செல்வமே பெரிதாகத் தெரிகிறது. பணத்தால் கண்ணகியை மகிழ்விக்கவோ அவள் மனதை வசப்படுத்தவோ முடியாது என்ற உண்மையை அவன் உணரவேயில்லை. அவளுக்குத் தேவை அவனது உண்மையான அன்புதான் என்பதையும் அவன் உணரவில்லை.

மீண்டுமொரு முறை இதே தவறைக் கோவலன் செய்கிறான். மாதரியின் வீட்டில் கண்ணகியிடம் இதே போன்று அவன் பேசும்போது கண்ணகி தக்க பதில் தருகிறாள். பொருளை இழந்ததற்காகவோ, உன்னுடன் வாழும் வாழ்வை இழந்ததற்காகவோ நான் வருந்தவில்லை. நீ என்னுடன் இல்லாததால் ஒரு குடும்பத்தலைவியாக நான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய முடியாமல் போய் விட்டது. அதற்காகத்தான் வருந்துகிறேன் என்று கோவலனின் சித்தம் தெளியும்படிக் கூறுகிறாள் கண்ணகி.

கோவலன் கண்ணகியைப் பிரிந்து சென்ற பின் சில ஆண்டுகள் கழித்தே திரும்பி வருகிறான். அதற்கிடையில் மாதவியுடனான மகிழ்ச்சிகரமான வாழ்க்கை, மணிமேகலை பிறப்பு, கொண்டாட்டங்கள் எனக் கோவலனின் வாழ்வு கழிகிறது. இந்த இடைப்பட்ட ஆண்டுகளில் கண்ணகியின் வாழ்வில் யாதொரு மாற்றமும் இல்லை. கோவலனின் பெயரால் அவள் தன் வீட்டிலிருந்த செல்வங்களை இழக்கிறாள். கண்ணகி தனது பெற்றோர்

வீட்டிற்கோ, கோவலனின் பெற்றோர் வீட்டிற்கோ சென்றதாகவோ, அவர்கள் கண்ணகியைக் காண வந்ததாகவோ பெரிதாகக் குறிப்பிடப்படவில்லை. மற்றவர்களும் கண்ணகியைக் காண வந்ததுமில்லை. அக்கம்பக்கத்தவரோடு கண்ணகி நேரம் செலவழித்ததாகவும் குறிப்புகள் இல்லை. பின்னாட்களில் கண்ணகியின் வாய்மொழியாகவே இதை அறியலாம். பரத்தமை ஒழுக்கம் அக்காலத்தில் பரவலாக இருந்தாலும் அது மரியாதைக்குரியதாக இல்லை. கண்ணகி கோவலனிடம்,

"போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" 4

என்றே குறிப்பிடுகிறாள்.

நெறிதவறிய கணவனின் செயல்களால் செல்வத்தைத் தொடர்ந்து இழந்ததோடு, கணவனிடமிருந்து ஒரு மனைவிக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அன்பையும் இழந்து தனித்து வாழ்ந்தது அவள் மனதை நெகிழ்வுத் தன்மையிலிருந்து மனம் இறுகிய நிலைக்குத் தள்ளுகிறது. அவள் தன் துயரங்களைத் தானே தனியாகச் சுமக்கிறாள். கோவலன் திரும்பி வந்தபோது கூட மாதரியிடம் அடைக்கலமாக இருந்த நாட்களில் இன்ப வாழ்வு குறித்து கற்பனை செய்யும்போது அவள் தன்னால் பொறுப்புகளை நிறைவேற்ற முடியவில்லையே என்றே வருந்துகிறாள்.

தன் தனிப்பட்ட வாழ்வின் இழப்புகளால் ஏற்பட்ட மனவருத்தம், பாதிப்புகளை அவள் பெரிதுபடுத்திக்கொள்ளவில்லை. மாறாக, கோவலன் இறந்த பிறகு அவள் ஆவேசம் கொள்கிறாள். ஏனென்றால் ‘திருடன்’ என்று பழி சுமத்தப்பட்டுக் கோவலன் இறந்தது அவர்கள் இருவருக்குமான தனிப்பட்ட பிரச்சினை இல்லை. அவர்கள் இருவரது குடும்பத்தினர், உறவுகள், பிற்காலச் சந்ததியினரையும் மிகக் கடுமையாகப் பாதிக்கக் கூடிய பெரும் அவமானம். எப்போதும் போலக் கண்ணகி தன் உணர்வுகளை விட பொறுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாள்.

தன் கணவனால் தங்களது வணிகர் குலத்திற்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்தெறியும் பொறுப்பை உணர்கிறாள். பாண்டிய அரசவையில் அவளது ஆதங்கம் தன் கணவனுக்கான பழியுணர்வினால் எழுந்ததில்லை; தன் குலப்பெருமை அழியாமல் காத்தாகவேண்டிய மாபெரும் கடமை. இன்றியமையாத அக்கடமையைக் கண்ணகி மிகச்சிறப்பாகவே நிறைவேற்றுகிறாள். கண்ணகி கோட்டமும் சாதாரண மக்கள் முதல் மன்னர்கள் வரை வணங்கிய சிறப்பும் சிலம்பும் அவளது பொறுப்பை நிறைவேற்றியதற்கான பெருமைக்குரிய சான்றுகள்.

மிகக் கொடுமையான பழியை ஐயந்திரிபற துடைத்தெறிய வேண்டுமானால் அதற்கெதிரான போராட்டம் அழுத்தமாகத்தானே இருக்க வேண்டும். அத்தகைய போராட்டத்தைத்தான் கண்ணகி முன்னெடுத்தாள், மிகச்சிறப்பாக வெற்றி பெற்றாள்.

கண்ணகி பேசாமடந்தைதான்; சிலம்பில் வழக்குரை காதையைத் தவிர்த்து அவள் பேசும் இடங்களும் வார்த்தைகளும் மிகச் சில தான் என்றாலும் அந்தச் சில சொற்களே

கண்ணகியின் ஆளுமையை உணர்த்தி நிற்கின்றன. கனாத்திறம் உரைத்த கதையிலிருந்து தான் கண்ணகியின் பெருமையையும் தகைமையையும் உணரத் தொடங்குகிறது.

"கற்பெனப்படுவது சொற் திறம்பாமை"5

என்ற அவ்வைப்பெருமாட்டியின் கூற்று கற்பின் அடையாளத்தை வரையறுக்கிறது.

“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மை யுண்டாகப் பெறின்”6

என்றார் வள்ளுவர். தன் வாக்கிலிருந்து தவறாத நேர்மை கொண்ட கற்பென்னும் வலுவான குணம் இருக்கும் பெண்ணை விட உயர்ந்தது எதுவுமில்லை.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்" 7

எனப் பெண் குறித்து வரையறை செய்கிறார் திருவள்ளுவர். மனைவி என்பவள் தன்னைக் காப்பதோடு, தன் கணவனையும் காத்துத் தன் வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவதில் சோர்வுபடக் கூடாது என்கிறது வள்ளுவம்.

**முடிவுரை**

தன் வருத்தங்களைக் கடந்து, எதிர்காலம் குறித்து அறிந்தும் கோவலன் அழைத்ததும் அவனோடு கண்ணகி மதுரைக்குச் செல்லத் தயாராகிறாள். அவனுக்கு மறுவாய்ப்புக் கொடுக்கிறாள். செல்வச் செழிப்பு மிக்கவளாக, பாதுகாப்பான, மான வாழ்க்கை வாழ்ந்த கண்ணகி, சோதனைகளை எதிர்கொள்ளும் துணிவு மிக்க பெண்மணியாவதற்கான தோற்றுவாய் கனாத்திறம் உரைத்த காதையாகும். இவ்வாறாக சிலப்பதிகாரத்தில் தன்மானம், அறிவு, ஆளுமை, அன்புமிக்க கண்ணகியைக் கனாத்திறம் உரைத்த காதையில் ஒருங்கே காணலாம். இதன் மூலம் ஆய்வுக்கருதுகோள் நிறுவப்பட்டது.

**மேற்கோள்கள்:**

1. சிலப்பதிகாரம் - கனாத்திறம் உரைத்த காதை - அடிகள்17-18
2. மேலது 59-61
3. மேலது 73
4. மேலது 81
5. கொன்றை வேந்தன் - அடி. 14
6. திருக்குறள் 54
7. மேலது 56

**ஆய்வுக்குத் துணைநின்றவை**

**நூல்கள்:**


1. சிலப்பதிகாரம் - உரை - டாக்டர் ப. சரவணன், சந்தியா பதிப்பகம், 57வது தெரு, அசோக் நகர், சென்னை- 6000083 பதிப்பு - 2008
2. குடிமக்கள் காப்பியம் - தெ.போ.மீனாட்சி சுந்தரனார், வெளியீடு:காவ்யா,16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை- 6000024. பதிப்பு - 2005
3. சிலப்பதிகாரத்தில் மனித உறவுகள் - முனைவர் சு. முத்து மாலை, பதிப்பு- தி பார்க்கர், 293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600014 ஆண்டு- 2007

**இதழ்கள் :**

ஆயுத எழுத்து - ஏப்ரல் 2019